(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

இல. 63.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2019 மே 23 வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

35/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக குருவிட்ட வாராந்தச் சந்தைக்கு வருகின்றார்கள் என்பதையும்;

(ii) எவ்வித வசதிகளுமின்றி பிறிதொரு இடத்தில் நடாத்தப்படுகின்ற மேற்படி வாராந்தச் சந்தை மழை நாட்களில் சேறும் சகதியும் நிறைந்த இடமாக மாறி விடுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி வாராந்தச் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

74/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 நவம்பர் மாதத்தில் ஒரு தினம் கோலாலம்பூரை நோக்கிச் செல்லவிருந்த மலேசிய வர்த்தகர் ஜயசுதீர் ஜெயராம் உட்பட மூவர் இந்த நாட்டிலிருந்து பணத்தை எடுத்துச் சென்றதன் காரணமாக இலங்கைச் சுங்கப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனரா?

(ii) அவ்வாறாயின், இவர்கள் கைதுசெய்யப்பட்டபோது இவர்களின் உடைமையிலிருந்த பணம் எவ்வளவு;

(iii) மேற்படி நபர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கைதுசெய்யப்பட்ட நபர்கள், சம்பந்தப்பட்ட விசாரணைகள் முடிவடையுமுன்னர் கோலாலம்பூர் நோக்கிச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனரா;

(ii) அவ்வாறாயின், அதற்கான அனுமதி யாரால் வழங்கப்பட்டது;

(iii) அது சம்பந்தப்பட்ட விசாரணைகள் மேற்படி நபர்கள் இன்றி முன்னெடுக்கப்பட்டுள்ளதா;

(iv) நிதி அமைச்சில் அது சம்பந்தப்பட்ட கோப்புகள் இன்றளவில் உள்ளனவா;

(v) கைப்பற்றப்பட்ட பணம் மீண்டும் குறித்த நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா;

(vi) இன்றேல், குறித்த பணம் இன்றளவில் வைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனம் யாது;

(vii) இந்த விசாரணையில் ஈடுபட்ட சுங்கப் பிரிவு அலுவலர்களுக்கு பணப்பரிசு வழங்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

3.

139/ ' 18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் உள்ளூராட்சி நிதிய நிலைமை 2010 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி காலகட்டத்திற்கு ஏற்புடையதாக, சபை நிதியத்தின் வரவு மற்றும் செலவைத் தனித்தனியாகச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) குறிப்பிட்ட காலகட்டத்தினுள் பதுளை மாவட்டத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான சபை நிதியத்தை வலுப்படுத்த அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

222/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொலிஸ் சேவையில் உப பொலிஸ் பரிசோதகர் பதவியில் தற்போதுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கேற்ப இவர்களுக்கு பொலிஸ் பரிசோதகர் பதவி வரையிலான பதவியுயர்வுகள் எவ்வளவு காலத்திற்குப் பின்னர் வழங்கப்பட வேண்டும் என்பதையும்;

(iii) இந்த உரிய காலத்தினை பூர்த்திசெய்துள்ள உப பொலிஸ் பரிசோதகர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

250/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொனராகல மாவட்டத்தின் மொனராகல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(ii) அப்பிரிவில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படாத எனினும், அடையாளம் காணப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் அமைந்துள்ளனவா;

(iii) ஆமெனில், அவை யாவை;

(iv) மேற்படி பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த ரஜமகா விகாரைகளின் எண்ணிக்கை எவ்வளவு; அது பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பாரா;

(v) மேற்படி தொல்பொருளியல் இடங்களின் பேணல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

334/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரணம் வழங்குவதில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) ஏற்கனவே, சமுர்த்தி நிவாரணத்திற்கு தகைமை பெற்றுக்கொண்டுள்ளவர்களுக்கு சமுர்த்தி நிவாரணம் கிடைப்பதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இது சம்பந்தமாக கவனம் செலுத்தி, சமுர்த்தி நிவாரணம் வழங்குவதிலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

364/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான தெல்தொட்ட தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி, ஊழியர் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

440/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 2015.12.31 ஆம் திகதியில் முடிவுறுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீதி விஸ்தரிப்புக்கள் மற்றும் மேம்படுத்தல்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்கள் அமைந்துள்ள மாவட்டம், கருத்திட்டத்தின் பெயர் மற்றும் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) 2016.12.31 ஆம் திகதியில் முடிவுறுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த கருத்திட்டங்கள் அமைந்திருந்த மாவட்டம், கருத்திட்டத்தின் பெயர் மற்றும் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) 2017.12.31 ஆம் திகதியில் முடிவுறுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த கருத்திட்டங்கள் அமைந்திருந்த மாவட்டம், கருத்திட்டத்தின் பெயர் மற்றும் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) ஒட்டுமொத்தமான முன்னேற்றம் சூனியமாக அமைந்த ஒப்பந்தங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(vi) ஒட்டுமொத்த முன்னேற்றமானது சூனியமாக அமைவதற்குக் காரணமான விடயங்கள் யாவை என்பதையும்;

(vii) அது தொடர்பாக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

475/ '19

கௌரவ முகம்மது நசீர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தின் ஊத்துப்பிட்டி, முரியாகடவல எனும் முகவரியில் அமைந்துள்ள அ/பமுனுகம முஸ்லிம் மகா வித்தியாலயமானது "அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை" எனும் கருத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) க.பொ.த.(உயர்தரம்) வரையிலான வகுப்புக்கள் நடத்தப்படுகின்ற மேற்படி பாடசாலையில் இடவசதிகள் தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 2017 அல்லது 2018 ஆம் ஆண்டுகளில் வகுப்பறைகளுடன்கூடிய பாடசாலைக் கட்டிடங்கள் வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைக்கு புதிய பாடசாலைக் கட்டிடமொன்றை துரிதமாகப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

494/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள வாராந்தச் சந்தைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வாராந்த சந்தைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த திகதி தொடக்கம் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சுக்கான ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்பட்ட வாராந்தச் சந்தைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(v) ஏனைய வாராந்தச் சந்தைகளை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

542/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டு முதல் 2018.06.30 ஆம் திகதி வரை சீனாவின் இலங்கைத் தூதரகம் மற்றும் அவுஸ்திரேலியாவின் இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் சேவையாற்றிய மற்றும் தற்போது சேவையாற்றி வருகின்ற அலுவலர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் பதவிகள் யாவை என்பதையும்;

(ii) அதற்காக தூதரக அலுவலர்கள் அல்லாத அரசாங்க திணைக்களங்கள் மற்றும் பகுதியளவிலான அரசாங்க நிறுவனங்களின் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iii) ஆமெனில், அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களின் பதவிகள் யாவை என்பதையும்;

(iv) இவர்களில் இராஜதந்திர கடவுச்சீட்டு விநியோகிக்கப்பட்டிருந்தவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கடவுச்சீட்டுக்களின் இலக்கங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி அலுவலர்களுக்கு இராஜதந்திர கடவுச்சீட்டுக்களை வழங்குவது உகந்தது என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு சிபாரிசு செய்துள்ளவர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

553/ '19

கௌரவ சி. சிறீதரன்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சிவில் பாதுகாப்புப் படையணித் திணைக்களத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்தப்படும் முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அத்திணைக்களத்தினால் சம்பளம் வழங்கப்படுகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் சிவில் பாதுகாப்புப் படையணியினால் நடாத்தப்படும் முன்பள்ளிகளின் எண்ணிக்கை, சம்பளம் வழங்கப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் ஆசிரியரொருவரின் சம்பளம் என்பன தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) இம் முன்பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களின் சீருடைகளுக்காக பெற்றோர்களிடமிருந்து பணம் அறவிடப்படுகின்றது என்பதையும்;

(iii) சீருடைகளுக்காக ஒரு மாணவனிடமிருந்து அறவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அக்கட்டணம் பெற்றோர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(v) இம்மாணவர்களின் சீருடைகளில் சிவில் பாதுகாப்புப் படையணியின் இலச்சினை அச்சிடப்பட்டிருப்பதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இவ்வாறு பாதுகாப்புப் படையினரால் முன்பள்ளி நடாத்தப்படுவதால் யுத்தத்திற்குப் பின்னரான நல்லிணக்கம், தேசிய ஒற்றுமை மற்றும் ஐக்கியம் ஆகிய விடயங்களில் செல்வாக்குச் செலுத்தமாட்டாதா என்பதையும்;

(ii) வட மாகாண சபைக்குரித்தான இம்முன்பள்ளிகள் சிவில் பாதுகாப்புப் படையணியினால் நடாத்தப்படுவது சட்டபூர்வமானதாகுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

13.

581/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்த்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 வரவு செலவுத்திட்டத்தின் 174 ஆம் முன்மொழிவின் பிரகாரம், தேசிய சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேலதிக நிகழ்ச்சித்திட்டங் களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 2000 மில்லியன் நிதி ஏற்பாடு 2016 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட முறையை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவின் பிரகாரம், நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்ட "மேலதிக நிகழ்ச்சித்திட்டங்கள்" யாவை என்பதையும்;

(iii) மேற்படி மேலதிக நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பொறுப்பான நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டில்,

(i) சுற்றாடல் சமநிலைமை பாதுகாத்தல்;

(ii) நிலைபேறான காணி முகாமைத்துவம்;

(iii) உயிர் வளங்களின் பாதுகாப்பு;

(iv) சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்தல்;

(v) வன வளங்களின் பாதுகாப்பு;

ஆகியவற்றுக்கு செலவிடப்பட்ட பணத் தொகைகள் தனித்தனியே யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

663/ ' 18

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சரை கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்பொழுது கிளிநொச்சி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 43,818 குடும்பங்கள் வசிக்கின்றன என்பதனையும்;

(ii) மீள்குடியேற்றப்பட்டதன் பின்னர் இதுவரையில் 4,039 குடும்பங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை என்பதனையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்குடும்பங்களுக்கு மின்சார இணைப்பு வழங்குவதற்கு துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதனையும்;

(ii) ஆமெனில், எந்த திகதியன்று இது வழங்கப்படும் என்பதனையும்;

(iii) அவ்வாறில்லையாயின், என்ன காரணங்களுக்காக என்பதனையும்

இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

695/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015.09.01 ஆம் திகதி தொடக்கம் 2017.07.31 ஆம் திகதி வரை சனாதிபதி, பிரதம அமைச்சர், சபாநாயகர் மற்றும் அமைச்சர்களுடன் மேற்கொண்ட வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் உள்ளடங்கலாக ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் மேற்கொண்ட உத்தியோகபூர்வ வெளிநாட்டு சுற்றுப்பயணங்களின் எண்ணிக்கையை இறங்குவரிசைக் கிரமத்திற்கேற்ப அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— 8 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 7.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 4.00 மணிக்கு 8(5) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நிதி அமைச்சர்,— வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ், சர்வதேச அரச பத்திரங்கள் வழங்குதல் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 27 ஆம் திகதிய 2112/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1 ),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 35 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 35

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "வெளியீடுகளை அச்சிடுதல் மற்றும் விற்பனை முற்பணக் கணக்கு — கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 4,800,000,000 இலிருந்து ரூபா. 4,363,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 2),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 36 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 36

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 22302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு (வெடி பொருட்கள்) - இலங்கை கடற்படை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 470,000,000 இலிருந்து ரூபா. 540,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 500,000,000 இலிருந்து ரூபா. 545,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | ரூபா. 220,000,000 இலிருந்து ரூபா. 230,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 3),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 37 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 24702 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் தடுத்துவைக்கப்பட்ட பொருட்களுக்கான முற்பணக் கணக்கு - இலங்கை சுங்கத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 12,000,000 இலிருந்து ரூபா. 27,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 1,500,000 இலிருந்து ரூபா. 4,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | ரூபா. 39,000,000 இலிருந்து ரூபா. 61,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. )

* 5.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 4),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 38 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 38

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "நானாவித முற்பணக் கணக்கு — அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 2,500,000 இலிருந்து ரூபா. 530,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 5),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 39 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 39

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு — இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 2,000,000,000 இலிருந்து ரூபா. 2,200,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 1,800,000,000 இலிருந்து ரூபா. 1,300,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 6),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 40 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 40

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 180,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 150,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | ரூபா. 40,000,000 இலிருந்து ரூபா. 75,000,000 வரை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | ரூபா. 40,000,000 இலிருந்து ரூபா. 60,000,000 வரை |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 7),— 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 41 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 41

2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம், அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "வேலை நிறைவுற்ற முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 350,000,000 இலிருந்து ரூபா. 410,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ இரான் விக்கிரமரத்ன*
பதில் நிதி அமைச்சர்

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

நிதி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.8),— 2017 இன் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(இக்கட்டளைகள் 2018.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

அட்டவணை

(இணைக்கப்பட்ட அட்டவணைக்கமைவாக)

**அட்டவணை**

**2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

நிதி ஆண்டு 2018 தொடர்பில், 2017 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்டதன் பிரகாரம், அரசாங்க ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்குவது சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

**குழுத்தொடர் இலக்கம். 01**

2017 அம் ஆண்டின் 30 இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், பதில் நிதி அமைச்சர், இரான் விக்கிரமரத்ன ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம், இதனுடன் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற விதத்தில் அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளின் விடய இலக்கங்கள் 00101, 02001, 02501, 14001, 14701, 15501, 16501, 19201, 20101, 20501, 20901, 21501, 22201, 22301, 22401, 22501, 22601, 23101, 24801, 25101, 25801, 25901, 26301, 26601, 27001, 27301, 27701, 28101, 28201, 28401, 28901, 30601, 32401 மற்றும் 33301 ஆகியன தொடர்பான அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறைகளைத் திருத்துவதோடு, அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகளையும் மாற்றுகின்றேன்.

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய | நிரல் II இல் ஆகக் கூடிய செலவின் வரையறை (ரூபா) | | நிரல் III இல் ஆகக் குறைந்த பெறுகை வரையறை (ரூபா) | | நிரல் IV இல் ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை (ரூபா) | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | இருந்து | வரை | இருந்து | வரை | |
| 1. | அதிமேதகு ஜனாதிபதி | 00101 | | | | | 100,000,000 | 120,000,000 | 1 |
| 2. | தேர்தல்கள் ஆணைக்குழு | 02001 | | | | | 85,000,000 | 95,000,000 | 2 |
| 3. | எல்லை மீள் நிர்ணய ஆணைக்குழு | 02501 | | | 250,000 | 150,000 | | | 3 |
| 4. | மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் | 14001 | 15,000,000 | 16,675,000 | | | | | 4 |
| 5. | பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் | 14701 | | | | | 7,000,000 | 7,300,000 | 5 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் | 15501 | | | | | 35,000,000 | 40,400,000 | 6 |
| 7. | தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சர் | 16501 | 3,000,000 | 3,030,000 | | | | | 7 |
| 8. | சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் | 19201 | | | 108,000,000 | 80,000,000 | | | 8 |
| 9. | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 20101 | | | 21,000,000 | 19,400,000 | | | 9 |
| 10. | பொது நம்பிக்கைப் பொறுப்புகள் திணைக்களம் | 20501 | | | 2,200,000 | 2,130,000 | | | 10 |
| 11. | தேசிய சுவடிக் காப்புத் திணைக்களம் | 20901 | | | 4,000,000 | 3,400,000 | | | 11 |
| 12. | தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 21501 | | | 55,000,000 | 48,000,000 | | | 12 |
| 13. | இலங்கைத் தரைப்படை | 22201 | | | 3,028,000,000 | 2,565,000,000 | | | 13 |
| 14. | இலங்கை கடற்படை | 22301 | | | 570,000,000 | 480,000,000 | | | 14 |
| 15. | இலங்கை விமானப்படை | 22401 | | | 460,000,000 | 396,000,000 | | | 15 |
| 16. | பொலிஸ் திணைக்களம் | 22501 | | | 1,200,000,000 | 1,145,000,000 | | | 16 |
| 17. | குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் | 22601 | | | | | 145,000,000 | 158,000,000 | 17 |
| 18. | கடன் இணக்க சபைத் திணைக்களம் | 23101 | | | 400,000 | 349,133 | | | 18 |
| 19. | மதுவரித் திணைக்களம் | 24801 | | | 37,000,000 | 36,000,000 | | | 19 |
| 20. | விலை மதிப்பீட்டுத் திணைக்களம் | 25101 | | | | | 90,000,000 | 90,500,000 | 20 |
| 21. | மாவட்டச் செயலகம், கண்டி | 25801 | | | 65,000,000 | 63,000,000 | | | 21 |
| 22. | மாவட்டச் செயலகம், மாத்தளை | 25901 | | | 38,000,000 | 34,000,000 | | | 22 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23. | மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை | 26301 | | | 51,000,000 | 43,000,000 | | | 23 |
| 24. | மாவட்டச் செயலகம்/கச்சேரி, வவுனியா | 26601 | | | 13,000,000 | 10,000,000 | | | 24 |
| 25. | மாவட்டச் செயலகம், அம்பாறை | 27001 | | | 47,000,000 | 45,000,000 | | | 25. |
| 26. | மாவட்டச் செயலகம், புத்தளம் | 27301 | | | 41,000,000 | 39,500,000 | | | 26. |
| 27. | மாவட்டச் செயலகம், மொணறாகலை | 27701 | | | 34,000,000 | 33,000,000 | | | 27. |
| 28. | கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 28101 | 295,000,000 | 295,320,000 | | | | | 28. |
| 29. | நீர்ப்பாசனத் திணைக்களம் | 28201 | 260,000,000 | 240,000,000 | 165,000,000 | 145,000,000 | | | 29. |
| 30. | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 28401 | | | | | 168,000,000 | 204,000,000 | 30. |
| 31. | ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம் | 28901 | | | | | 110,000,000 | 115,000,000 | 31. |
| 32. | இலங்கை புகையிரதத் திணைக்களம் | 30601 | | | | | 1,500,000,000 | 1,520,000,000 | 32. |
| 33. | முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம் | 32401 | | | 2,200,000 | 2,150,000 | | | 33. |
| 34. | கொம்றோலர் நாயகம் திணைக்களம் | 33301 | | | | | 3,500,000 | 600,000 | 34. |

2019.05.09 ஆம் திகதி
கொழும்பு.

ஒப்பம்/ இரான் விக்ரமரத்ன
பதில் நிதி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

தேயிலை ஆராய்ச்சி சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 12.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

மோட்டார் வாகனம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 21.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 25.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.).

27.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.